IntSym 2019
9th International Symposium

# FUNDAMENTAL CAUSES OF DIVORCE: A SOCIOLOGICAL STUDY

**S.M. Ayoob**[123]

Correspondence: ayoobsm@seu.ac.lk

## ABSTRACT

Divorce is considered to be the situation where a husband and wife terminating or dissolving their marital bond legally. Divorce destructs the family institution severely in numerous ways. This research is aimed to find out the reasons behind the divorce which were proposed by different researchers and scholars in the field of sociology. This is a review article based on secondary data. Industrialisation, the advancement in gender equality, easiness in the laws of getting divorce, foreign employment, dowry, drug addiction, sexual related conditions, violence, disloyalty and betrayal are the underlying reasons which induce the divorce in the society.

**Keywords:** divorce, infidelity, immature

**ஆய்வுச் சுருக்கம்**

கணவனும் மனைவியும் திருமண பந்தத்தை முறித்துக் கொள்ளும் சட்டபூர்வமான நிலையே விவாகரத்தாகும். விவாகரத்தின் மூலம் குடும்பம் எனும் நிறுவனம் சிதறுண்டு போகின்றது. சமூகவியல் ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்ட விவாகரத்துக்கான காரணங்களை கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி விவரண தொகுப்பாக இவ்வாய்வு அமைகின்றது. கைத்தொழில்மயமாக்கம், ஆண் பெண் சமத்துவத்தில் ஏற்பட்ட முன்னேற்றம், விவாகரத்தை பெறும் வழிகள் இலகுவாக்கப்பட்டமை போன்ற காரணிகளும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சீதனம், போதைப்பொருள் பாவனை, பாலியல் ரீதியான காரணங்கள், வன்முறை, நம்பிக்கை துரோகம் போன்ற காரணிகளும் விவாகரத்தை தூண்டுகின்றன.

**Key words:** Divorce, Infidelity, Immature

## அறிமுகம்

விவாகரத்து என்பது குடும்பத்தின் கட்டமைப்பில் ஏற்படும் சீர்குலைவை குறித்து நிற்கின்றது. திருமண வாழ்வு சட்ட ரீதியாக உடையும் செயற்பாடு எனவும் இதனை குறிப்பிடலாம். இதற்கு மாற்றமானது கைவிடுதல் (Desertion). சட்ட ரீதியற்ற, உத்தியோக பூர்வமற்ற மற்றும் பொறுப்பற்ற முறையில் கணவனோ மனைவியோ குடும்ப வாழ்விலிருந்து தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ ஒதுங்குவதை கைவிடுதல் குறிக்கின்றது. விவாகரத்துப் பெற்ற கணவனும் மனைவியும் தனித்தனி நபர்களாக மாறிவிடுவதால் அவர்கள் மீள திருமணம் முடிக்க முடியும். விவாகரத்து குறித்து பல்வேறு சமூகவியலாளர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள்.

விவாகரத்தானது ஒரு சட்ட பூர்வமான நிலையாகும். இதன் மூலம் கணவனும் மனைவியும் தமது திருமண பந்தத்தை முறித்துக் கொள்ளும் ஒரு செயற்பாட்டில் இறங்குகின்றனர் என மமோரியா (Mamoriya) வரையறை செய்கின்றார்.

ஸ்கொட் (W.P.Scott) கணவன் மனைவி இருவரும் தமது திருமண பந்தத்தை முறித்துக் கொள்ளவும், மீண்டும் இருவரும் திருமணம் செய்து கொள்ளும் தகுதியை அடைந்து

[123] Department of Sociology, South Eastern University of Sri Lanka.

கொள்ளவும் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள ஒரு செயற்பாடு என விவாகரத்தை வரைவிலக்கணப்படுத்துகின்றார்.

## ஆய்வு நோக்கம்

ஒரு சமுதாயத்தின் எளிய வடிவமாக கருதப்படும் குடும்பமானது சிதறுண்டு போகும் செயற்பாடே விவாகரத்தாகும். விவாகரத்துக்கான காரணங்களை கண்டறிவதும் விவாகரத்தை குறைப்பதற்கான வழிகளை பரிந்துரை செய்வதுமே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு முறையியல்

புத்தகங்கள், ஆய்வு அறிக்கைகள், சஞ்சிகைகள், பிரதேச செயலக ஆண்டு அறிக்கைகள், வலைத்தளங்களின் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி இரண்டாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டு விபரண முறையில் இவ்வாய்வு எழுதப்படுகின்றது.

## பெறுபேறும் கலந்துரையாடலும்

விவாகரத்து இடம் பெறுவதற்கு முன்வைக்கப்படும் தனிமனித காரணங்களை விட விவாகரத்துக்கான சமூகக் காரணங்களை சமூகவியலாளர்கள் ஆராய்கின்றனர். அதன் அடிப்படையில் விவாகரத்து இடம்பெறுவதற்கான நான்கு காரணிகளை அவர்கள் முன்வைக்கின்றார்கள். (சுலீவன், 2016)

01.கைத்தொழில் மயமாக்கத்தினால் ஏற்பட்ட உறவின் மீதான குறைந்த தங்கியிருப்பு

கைத்தொழில்மயமாக்கத்தின் பிற்பாடு ஏற்பட்ட சமூக பொருளாதார பண்பாட்டு மாற்றங்கள் குடும்பத்திலும் தாக்கத்தினை கொண்டு வந்திருக்கின்றன. பண்டைய சமூகத்தில் ஒரு குடும்பத்தின் ஒற்றுமையை துண்டாடும் காரணிகள் குறைவாகவே காணப்பட்டன. கணவன் மற்றும் மனைவி இருவருக்கிடையே பிரச்சினை தோன்றினாலும் அவர்கள் தனித்து வாழ முடியாத மற்றும் குழந்தைகளை வளர்க்க முடியாத சூழ்நிலைகள் நிலவியதால் விவாகரத்து இடம் பெறும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. ஆனால் நவீன உலகில் தனித்து நின்று குழந்தைகளை வளர்ப்பதற்கான ஆதரவும், சொந்தக் காலில் நின்று உழைத்து வாழ்வதற்கான வழிகளும் காணப்படுவதால் ஒருவர் அடுத்தவரில் தங்கி நிற்கும் நிலை இல்லாமற்போய் விவாகரத்தின் அளவு அதிகரிக்கின்றது.

02. ஆண் மற்றும் பெண்களுக்கிடையே அதிகரித்த சமத்துவம் (Equality)

ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையே ஏற்பட்ட சமத்துவ சிந்தனையின் காரணமாக விவாகரத்தின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கணவன் இல்லாமல் தன்னையும் தனது பிள்ளைகளையும் தனது வருமானத்தில் பார்த்துக் கொள்ள முடியும் எனும் நம்பிக்கை வளர்க்கப்பட்டிருப்பதன் காரணமாக கணவன் மனைவிக்கிடையிலான பிரச்சினைகள் தோன்றுமிடத்து விவாகரத்தின் பக்கம் பெண்கள் சடுதியாக சென்றுவிடுகின்றனர்.

03. குறைந்த களங்கம் (Less stigma)

பண்டைய காலத்தில் போன்றல்லாது நவீன யுகத்தில் விவாகரத்தானது சாதாரண நிகழ்வாக பார்க்கப்படுகின்றது. பண்டைய யுகத்தில் விவாகரத்தானது ஒரு மனிதனுடைய வாழ்வில் ஏற்படும் மிகப் பெரிய வீழ்ச்சியாக பார்க்கப்பட்டது. விவாகரத்தான பெண்கள் வாழ்க்கையை தவற விட்டவர்களாகக் கருதி முக்கிய சடங்குகளிலிருந்து விலக்கப்பட்டார்கள். விவாகரத்தானவர்கள் நீதி மற்றும் ஒழுக்கம் தவறியவர்களாகவும் கணிக்கப்பட்டார்கள். இன்று அந்நிலை மாறிவிட்டதால் விவாகரத்தான பெண்கள் ஏனைய பெண்களைப் போல் நோக்கப்படுவதால் விவாகரத்தின் அளவு கூடியுள்ளது.

04. விவாகரத்துப் பெறுவதற்கான சட்ட செயன்முறை இலகுவாக்கப்பட்டமை

விவாகரத்து குறித்த சிந்தனைகளிலும் கருத்துக்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள் விவாகரத்தை பெற்றுக்கொள்வதற்கான வழிகளை இலகுபடுத்தியுள்ளன. சட்டத்தின் துணையுடன் விவாகரத்துக்கள் இலகுவாக ரத்து செய்யப்படுவதற்கான வழிகள்

தோன்றியுள்ளன.

சர்மா (Sharma, Y.K, 2007) விவாகரத்துக்கான காரணங்களாக பின்வருவனவற்றை அடையாளங் காண்கிறார்.

01. கருக்குடும்பத்தில் காணப்படும் அழுத்தம் (Stress on the nuclear family)

கருக்குடும்பங்களில் காணப்படும் கணவன் மனைவி அதிகரித்த பரஸ்பர தங்கியிருப்பைக் கொண்டிருப்பர். இதன் போது குடும்பத் தலைவனின் பொருளாதார பலவீனம், பரஸ்பர உணர்வு ரீதியான ஆதரவின் போதாமை போன்றவை விவாகரத்தை நோக்கி அவர்களை தள்ளி விடுகின்றன.

02. நீர்த்துப் போகும் காதல் (The fading of romantic love)

மேற்கத்தேய மக்களிடையே காணப்படும் ஒரு கருதுகோளாக காதல் வாழ்க்கை காணப்படுகின்றது. ஆண் பெண் இருவரிடையே உண்டாகும் பரஸ்பரக் காதல் தமது வாழ்நாட்கள் முழுக்க தொடர்ந்து மகிழ்விக்கும் என நம்புகின்றனர். ஆனால் வாழ்க்கையில் தோற்றம் பெறும் அத்தகைய காதல் உணர்வு ஒரு குறுகிய காலத்திற்கே உரியது என்னும் யதார்த்தம் புரிந்தவுடன் அத்தகைய காதல் வாழ்க்கை வலுவிழந்து மங்கிப் போகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் திருமண வாழ்வு வெற்றியளிக்கவில்லை எனக் கருதி விவாகரத்தை நாடிச் செல்கின்றனர் அவர்கள்.

03. பெண்களின் வகிபங்கில் ஏற்பட்ட மாற்றங்கள் (Changing role of women )

புராதன காலத்தை போன்றல்லாது பெண்கள் நவீன உலகில் பல்வேறு வகிபாகங்களில் ஈடுபடுகின்றனர். புராதன காலத்துப் பெண்கள் வீட்டில் தமது வாழ்நாட்களைக் கழிப்பவர்களாகவும் கணவன், பிள்ளைகள், வீட்டு வேலைகள் எனும் வட்டத்தினுள் வாழ்வினை நகர்த்துபவர்களாகவும் காணப்பட்டதனால் பிரச்சினைகள் தோன்றினாலும் அவை விரைவில் தீர்ந்தன அல்லது தீர்க்கப்பட்டன. நவீன குடும்பங்களில் பெண்கள் அதிக சுதந்திரமுள்ளவர்களாகவும் தன்னிறைவினை அடைந்தவர்களாகவும் காணப்படுவதால் சிறு பிரச்சனைகளும் விவாகரத்தை நோக்கியே தள்ளுகின்றன. பெண்களின் பொருளாதார பலம் தனித்து குடும்பத்தை நடத்தும் தைரியத்தினையும் இன்னொரு துணையைத் தேடிக் கொள்ளும் வாய்ப்பினையும் வழங்குகின்றது.

04. பாலியல் சுதந்திரம் (Sexual permissiveness)

பாலியல் தேவைகள் கணவன் மனைவியிடையே இடம் பெற வேண்டும் என்பது குடும்ப தர்மமாகும். அபரிதமான கருத்தடை சாதனங்களின் வருகை 'கருவுறுதல்' எனும் அபாயத்தை நீக்கியுள்ளதால் குடும்பத்திற்கு வெளியேயும் பாலியல் உறவில் ஈடுபட ஆணும் பெண்ணும் முனையும் போது அது விவாகரத்துக்கு இட்டுச் செல்கின்றது.

2003 இல் குடும்ப விவகாரம் தொடர்பான ஒரு சஞ்சிகை (Journal of family issues) 200 பேரை ஆய்வுக்குட்படுத்தி விவாகரத்துக்கான காரணிகளை பின்வருமாறு வரையறை செய்கின்றது.

01. துரோகம் இழைத்தல் (infidelity)
02. பொருத்தமின்மை (Incompatable)
03. போதைப் பொருள் பாவனை
04. ஆளுமைக் கோளாறுகள்
05. தொடர்பாடல் வரட்சி

06. அன்பு குறைதல்
07. உடல் மற்றும் உள துஷ்பிரயோகம்
08. குடும்ப கடப்பாடுகளை நிறைவேற்றாமை (Obligations)
09. வேலையின்மை
10. திருமண வாழ்வு மகிழ்ச்சியின்மை
11. பண ரீதியான நெருக்கடிகள்
12. முதிர்ச்சியின்மை (immature)
13. குறுக்கீடு (interference)

வேறு சில அறிஞர்கள் விவாகரத்துக்கு பின்வரும் காரணிகளை அடையாளங் காண்கின்றார்கள்

01. அதிகளவான விவாதம்
02. மிக மிக இளயவரை மணத்தல்
03. நிறைவேற்ற முடியாத எதிர்பார்ப்பு
04. திருமணத்திற்கு தயாராகாத நிலை
05. வன்முறை அல்லது துஷ்பிரயோகம்
06. நம்பிக்கை குறைதல்
07. தொல்லை கொடுத்தல்
08. அடிக்கடி ஏற்படும் சண்டை

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் செய்யப்பட்ட ஆய்வுகள் பின்வரும் காரணிகளை விவாகரத்துக்கான காரணிகளாக சுட்டிக் காட்டுகின்றன.

01. வெளிநாட்டு வேலைவாய்ப்பு காரணமாக வெளியே சென்ற ஆண்களும் பெண்களும் வேறு நபர்களுடன் காதல் மற்றும் பாலியல் தொடர்புகளை ஏற்படுத்தியமை விவாகரத்தை கொண்டு வந்திருக்கின்றது.

02. தொழில் வழங்கும் முகவர்கள் ஆண்களையும் பெண்களையும் இணைத்து ஜோடியாக போலி ஆவணங்கள் மூலம் அனுப்பி வைக்கின்றனர். இவர்கள் மீளத் திரும்பும் போது தமது உண்மையான கணவனை அல்லது மனைவியை விவாகரத்து செய்யும் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

03. மனைவி வெளிநாட்டுக்கு சென்றுவிட்ட சந்தர்ப்பங்களில் மனைவியின் தங்கையை பாலியல் தேவைக்கு பயன்படுத்தும் போது அல்லது திருமணம் செய்து கொள்ளும் போது நாடு திரும்பிய மனைவியால் கணவன் விவாகரத்து செய்யப்பட்டிருக்கிறான்.

04. திருமண பேச்சுவார்த்தையின் போது மணமகள் தரப்பினர் தருவதாக வாக்களித்த சீதனத்தின் அளவில் குறைவு செய்யப்படுகின்றபோது பல குடும்பங்கள் விவாகரத்து பெற்றிருக்கின்றன.

05. சில உண்மைகள் மறைக்கப்பட்டமையினாலும் பல திருமணங்கள் உடைந்திருக்கின்றன. பெண்களின் அதிகரித்த வயதையும் அவள் வெளிநாட்டுக்கு உழைக்க சென்றவள் என்பதையும் மறைத்தல், திருமணம் முடிக்கும் ஆண் ஏற்கனவே திருமணம் முடித்து விவாகரத்துப் பெற்றவர் என்பதனை மறைத்தல் போன்றனவும் விவாகரத்துக்கு காரணமாக அமைந்திருக்கின்றன. அதே போல் பரஸ்பரம் இருக்கும் நோயை மறைத்து திருமணம் முடித்தமையும் விவாகரத்தை தூண்டும் செயலாக மாறியிருக்கின்றது.

06. பாலியல் ரீதியான காரணிகளும் விவாகரத்தை தூண்டுகின்றன. பாலியல் திருப்தியின்மை, பிள்ளைப் பேறின்மை போன்ற காரணிகளும் கணவனோ மனைவியோ வேறு பெண்களுடன் அல்லது வேறு ஆண்களுடன் பாலியல் தொடர்புகளை வைத்திருந்தமையினால் விவாகரத்துக்கள் இடம் பெற்றுள்ளன. பாலியல் படங்களில் இடம் பெறும் செயற்பாடுகளை செய்ய தூண்டியும் செய்யாத மனைவிகள் விவாகரத்துச்

செய்யப்பட்டிருக்கின்றனர். அதிதீவிர பாலியல் இன்பங்களை தீரத்துக் கொள்ள முனையும் கணவன்மார்களும் மனைவியால் விவாகரத்து செய்யப்படுகின்றார்கள்.

**முடிவுரையும் விதந்துரையும்**

பாரம்பரிய சமூகத்தில் விவாகரத்தின் அளவு ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்பட்டது. மதத்தின் போதனைகள் விவாகரத்தின் வேகத்தினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தன. அண்மைய சமூகத்தில் விவாகரத்தின் அளவு அதிகரித்திருக்கின்றன. விவாகரத்தினை குறைக்க பின்வரும் பரிந்துரைகளை செய்ய முடியும்.

- குடும்ப வாழ்வின் அவசியம் குறித்தும் அவற்றின் நீட்சி குறித்தும் ஆண் ,பெண் இருவருக்கும் அறிவுறுத்தல்.
- திருமணத்திற்கு முன்பே திருமணம் குறித்தும் ஆண்கள் மற்றும் பெண்களின் இயல்புகள் குறித்தும் பரஸ்பரம் அறிவூட்டல்.
- கணவண் -மனைவி தகராரின் போது ஏனையவர்களின் தலையீட்டை தேவையின் நிமிர்த்தம் மட்டும் உள்வாங்கல்.
- பெண்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பை குறைத்து உள்ளூரில் தொழில் புரிவதற்கான வழிவகைகளை கண்டறிதல்.
- கணவன் மனைவியிடையே அன்பு, நம்பிக்கை ,உதவி செய்யும் மனப்பான்மை , தொடர்பாடல் போன்றவற்றில் சுமூக அதிகரிப்பு ஏற்பட வழி செய்தல்.
- மதரஸாக்கள், பாடசாலைகள், மதஸ்தலங்கள் போன்ற நிறுவனங்களைப் பயன்படுத்தி குடும்பத்தின் அவசியம் குறித்தும் அது உடைந்து போவதன் பாதகம் குறித்தும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தல்.
- சீதனத்தை மட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- எல்லை மீறிய பாலியல் ஆசைகளின் விபரீதங்கள் குறித்து ஆண் - பெண் இருபாலாருக்கும் அச்சுறுத்துதல்.
- திருமண நிச்சயத்தின் போது பொருத்தப்பாடு, உடல் உள இயலுமைகள் போன்றவற்றை கவனித்தல்.

**உசாத்துணை நூல்கள்**

அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பாரதி பக்தவத்சல. (1999). *பண்பாட்டு மானிடவியல்.* சென்னை: மணிவாசகம் பதிப்பகம்

பரமசிவன், தொ.(2003) *பண்பாட்டு அசைவுகள்.* சென்னை: காலச்சுவடு பதிப்பகம்.

ஹீல்பிகார்,(1997) தலாக் சொல்லாதீர்கள், தஞ்சாவூர் : காஹியார் புக் டிப்போ

Giddens Anthony. (2005). *Sociology.* Cambridge:Polity Press.

Haralambos M, and Heald R.M., (2004). *Sociology: Themes and Perspectives.* London: Harper Collins Publishers Limited.

Johnson, Harry, (1999). *Sociology: A Systematic Introduction.* New Delhi:. Aliede Publishers.

Landis, Paul H., (1990). *Sociology: An Introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.

Rao Sankar, (2002). *Sociology*: *Primary Principles.* New Delhi: S.Chand and Commpany Ltd.

Sharma, Y.K. (2007). *Indian society: Issues and problems.* Agra: Lakshmi: Narain Agarwal Publication.

Shellie Warren, (2019, October, 31). Ten most common reasons for divorce. Retrieved from https://www.marriage.com/advice/divorce/10-most-common-reasons-for-divorce/

Sullivan, T.J. (2016). *Introduction to Social Problems*. New York: Pearson.

Yew Amy, (2014, December, 09).Top reasons why people divorce. Retrieved from https://www.vancourier.com/opinion/top-reasons-why-people-divorce-1.2180240